## அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை
## *Ang Mo Kio Tamil Methodist Church*

**திருவிருந்து ஞாயிறு ஆராதனை / Holy Communion Sunday**

**7th ஜனவரி / January 2024**

| | |
|---|---|
| ✝ **ஆராதனைக்கு அழைப்பு**<br>Call to Worship | **திரு. பிரேம்குமார்**<br>Mr. Premkumar |
| **மௌன தியானம்**<br>Silent Meditation | |
| **இறைவணக்கப்பாடல்**<br>Introit | **பாடகர் குழு**<br>Choir |
| **ஜெபம்**<br>Prayer | **திரு. பிரேம்குமார்**<br>Mr. Premkumar |
| ✝ **தொடக்க பாடல்**<br>Opening Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

### எப்போதும், இயேசு நாதா

1. எப்போதும், இயேசு நாதா,
உம்மைப் பின்பற்றுவேன்
என்றே தீர்மானமாக
நான் வாக்குக் கொடுத்தேன்
நீர் என்னைத் தாங்கிக் காப்பீர்,
அப்போது அஞ்சிடேன்
முன்சென்று பாதை காட்டும்,
நான் வழி தவறேன்.

2. பூலோக இன்பம் செல்வம்
வீண் ஆசாபாசத்தால்,
என் ஆத்மா மயங்காமல்
தெய்வீக பலத்தால்
நீர் துணைநின்று தாங்கும்,
என் அருள் நாயகா?
தீங்கணுகாமல் காரும்,
மா வல்ல ரட்சகா.

3. ஆங்காரம் சுய சித்தம்
தகாத சிந்தையால்
மா கலக்கம் உண்டாகி
நான் தடுமாறினால்,
நீர் பேசும் அருள் நாதா,
கொந்தளிப்படங்கும்
உம் நேச சத்தம் கேட்டு
என் ஆவி மகிழும்.

4. 'பின்பற்றினால் விண் வீட்டில்
பேரின்பம் பெறுவீர்,'
என்றே உம் சீஷர் நோக்கி
நீர் வாக்கு அளித்தீர்
அவ்வருள் வாக்கை நம்பி
இவ்வேழை அடியேன்
"இதோ பின்செல்வேன்," என்று
பிரதிக்னை பண்ணினேன்.

| | |
|---|---|
| ✝ **பொதுவான பாவ அறிக்கை (திரையில்)**<br>Prayer of Confession (On screen) | **சபையார் இணைந்து**<br>Congregation |

சர்வ வல்லமையும் மிகுந்த இரக்கமுமுள்ள பிதாவே, தப்பிப்போன ஆடுகளைப் போல நாங்கள் உம்முடைய வழிகளை விட்டு வழுவி அலைந்து போனோம். எங்கள் இருதயத்தின் யோசனைகளுக்கும் விருப்பங்களுக்கும் மிகவும் இணங்கி நடந்தோம். உமது பரிசுத்த கற்பனைகளுக்கு விரோதமாய் குற்றஞ் செய்தோம். செய்யத் தக்கவைகளைச் செய்யாமல், செய்யத் தகாதவைகளைச் செய்து வந்தோம். எங்களுக்குச் சுகமே இல்லை. ஆனாலும் ஆண்டவரே, தேவரீர் எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் மனிதருக்கு அருளிச்செய்த வாக்குத் தத்தங்களின்படியே, நிர்ப்பாக்கியமுள்ள குற்றவாளிகளாகிய எங்களுக்கு இரங்கும். தப்பிதங்களை அறிக்கையிடுகிற எங்கள்மேல் பொறுமையாயிரும். பாவத்தினிமித்தம் துக்கப்படுகிற எங்களைச் சீர்ப்படுத்தும். மிகவும் இரக்கமுள்ள பிதாவே, உம்முடைய பரிசுத்த நாமத்துக்கு மகிமை உண்டாகும்படி, நாங்கள் இனித் தேவபக்தியும் நீதியும் தெளிந்த புத்தியும் உள்ளவர்களாய் நடந்து வர, இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் எங்களுக்குக் கிருபை செய்தருளும். **ஆமென்.**

| | |
|---|---|
| ✝ **அப்போஸ்தலருடைய விசுவாசப் பிரமாணம் (பாடலாக) (திரையில்)**<br>The Apostle's Creed (On screen) | **சபையார் இணைந்து**<br>Congregation |

உலகும் வானும் செய்தாளும் ஒப்பில் சர்வ வல்லவராய்
இலகு மருளாம் தந்தையாம் எம்பிரான்றனை நம்புகிறேன்.

அவரொரு பேறாமைந்தனுமாய் ஆதிமுதலெங் கர்த்தனுமாய்
தவறிலேசுகிறிஸ்துவையும் சந்ததமே யான் நம்புகிறேன்.

பரிசுத்தாவி அருளதனால் படிமேல் கன்னிமரியிடமாய்
உருவாய் நரர் அவதாரமாய் உதித்தாரெனவும் நம்புகிறேன்.

பொந்து பிலாத்ததிபதி நாளில் புகலரு பாடுகளையேற்றி
உந்துந் சிலுவையறையுண்டு உயிர்விட்டாரென நம்புகிறேன்.

இறந்தே அடங்கிப்பாதாளம் இறங்கி மூன்றாந் தினமதிலே
இறந்தோரிட நின்றே உயிரோ டெழுந் தாரெனவும் நம்புகிறேன்.

சந்ததமோட்சம் எழுந்தருளிச் சருவ வல்ல பரனான
எந்தை தன்வல பாரிசமேயிருக்கின்றாரென நம்புகிறேன்.

உயிருள்ளோரை மரித்தோரை உத்தமஞாயந் தீர்த்திடவே
ஜெயமாய்த் திரும்ப வருவாரெனச் சிந்தையார நம்புகிறேன்.

பரிசுத்தாவியை நம்புகிறேன் பரிசுத்தமாபொதுச் சபையும்
பாவ மன்னிப்புளதெனவும் மரித்தோருயிர்தெழு வாரெனவும்
ஓவா நித்ய ஜீவனுமே உளதெனவும் யான் நம்புகிறேன்.
**ஆமென்.....**

## இறையாசனத்தண்டை வருகை / APPROACHING GOD'S THRONE

**சிறுவர்க்கான ஜெபம்** — **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Prayer for Children — Rev. Vijay Joseph

**ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்** — **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Thanksgiving & Pastoral Prayer — Rev. Vijay Joseph

**கர்த்தருடைய ஜெபம் (பாடலாக) (திரையில்)** — **சபையார் இணைந்து**
Lord's prayer (On screen) — Congregation

### பரத்தில் எங்கள் பிதாவே

பரத்தில் எங்கள் பிதாவே
பரிசுத்தமானவரே
உம் இராஜியம் வருவதாக
உம் சித்தம் நிறைவேறவே } 2
- பரத்தில் எங்கள் பிதாவே

இந் நாள் ஆகாரத்தை
எங்களுக்கு நீர் தாரும் } 2
நீரே ஜீவனின் அப்பம்
அதுவே எங்கள் பெலனே
- பரத்தில் எங்கள் பிதாவே

எங்கள் கடனாளிகளை
நாங்கள் மன்னிப்பது போல } 2
நீரோ எங்கள் பாவ
கடன்களை மன்னித்தருளும்
- பரத்தில் எங்கள் பிதாவே

சாத்தானின் வலையில் நீர் காத்து
தீங்கினின்று இரட்சியும் } 2
மகிமை வல்லமையாய்
என்றென்றைக்கும் ஆக
ஆமேன்..ஆமேன்..ஆமேன்..(3)

## இறைவனுக்கு அளித்தல் / GIVING TO GOD

✝ **காணிக்கை பாடல்** — **சபையார் இணைந்து**
Offertory Song (On Screen) — Congregation

### ஆத்துமமே என் முழு உள்ளமே

ஆத்துமமே, என் முழு
உள்ளமே, - உன்
ஆண்டவரைத் தொழுதேத்து –
இந்நாள் வரை
அன்பு வைத் தாதரித்த உன்
ஆண்டவரைத் தொழு தேத்து.

1. போற்றிடும் வானோர்,
பூதலத்துள்ளோர்
சாற்றுதற் கரிய தன்மையுள்ள.

2. தலை முறை தலை முறை
தாங்கும் விநோத
உலக முன்தோன்றி ஒழியாத.

3. தினம் தினம் உலகில் நீ
செய் பலவான
வினை பொறுத் தருளும்,
மேலான.

4. வாதை, நோய், துன்பம்
மாற்றி, அனந்த
ஓதரும் தயை செய்துயிர்
தந்த.

5. உற்றுனக் கிரங்கி
உரிமை பாராட்டும்,
முற்றும் கிருபையினால் முடி
சூட்டும்.

6. துதி மிகுந்தேறத்
தோத்திரி
தினமே,
இதயமே, உள்ளமே, என்
மனமே.

✝ **பூலோகத்தாரே யாவரும்** — **சபையார் இணைந்து**
Doxology — Congregation

## இறை வார்த்தைக்கு செவிமடுத்தல் / LISTENING TO GOD'S WORD

✝ **திருமறைப் பாடம்** **ஆதியாகமம் 9 : 8 - 17** — **திரு. ஜோயல்**
Scripture Reading : Genesis 9 : 8 - 17 — Mr. Joel

**அருளுரை** — **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Sermon — Rev. Vijay Joseph

✝ **ஆயத்தப் பாடல் (திரையில்)** — **சபையார் இணைந்து**
Preparatory Song (On screen) — Congregation

## பரிசுத்தம் பெற வந்திட்டீர்களா

1. பரிசுத்தம் பெற வந்திட்டீர்களா
ஒப்பில்லாத் திரு ஸ்நானத்தினால்
பாவதோஷம் நீங்க நம்பினீர்களா
ஆட்டுக் குட்டியின் ரத்தத்தினால்.

மாசில்லா சுத்தமா
திரு புண்ணிய தீர்த்தத்தினால்
குற்றம் நீங்கிவிட குணம் மாறிற்றா
ஆட்டுக் குட்டியின் இரத்தத்தினால்.

2. பரலோக சிந்தை அணிந்தீர்களா
வல்ல மீட்பர் தயாளத்தினால்
மறுஜென்ம குணமடைந்தீர்களா
ஆட்டுக் குட்டியின் ரத்தத்தினால்.

3. மணவாளன் வரக் களிப்பீர்களா
தூய நதியின் ஸ்நானத்தினால்
மோட்சக்கரை ஏறிச் சுகிப்பீர்களா
ஆட்டுக் குட்டியின் ரத்தத்தினால்.

4. மாசு கறை நீங்கும் நீசப்பாவியே
சுத்த ரத்தத்தின் சக்தியினால்
முக்தி பேறுண்டாகும் குற்றவாளியே
ஆட்டுக் குட்டியின் ரத்தத்தினால்.

**திருவிருந்து ஆராதனை முறைமை (திரையில்)**
Order of Holy Communion (On screen)

**மறைதிரு. விஜய் ஜோஸப்**
Rev. Vijay Joseph

**தேவ ஆராதனை புத்தகம், பக்கம்** 104

**போதகர்** : உங்கள் இருதயத்தை உயர்த்துங்கள்.

**சபையார்** : **எங்கள் இருதயத்தைக் கர்த்தரிடத்தில் உயர்த்துகிறோம்.**

**போதகர்** : நம்முடைய கர்த்தராகிய தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தக் கடவோம்.

**சபையார்** : **அப்படிச் செய்வது தகுதியும் நீதியுமாயிருக்கிறது.**

**போதகர்** : கர்த்தாவே, பரிசுத்த பிதாவே, சர்வ வல்லமையுள்ள நித்திய தேவனே, நாங்கள் எக்காலத்திலும், எவ்விடத்திலும் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறது தகுதியும் நீதியும் எங்களுக்கு விசேஷித்த கடமையுமாயிருக்கிறது. ஆதலால் தூதரோடும், பரம சபையனைத்தோடும் நாங்கள் உமது மகிமையுள்ள நாமத்தைப் புகழ்ந்து மேன்மைப்படுத்தி.

**எல்லாரும் : சேனைகளின் கர்த்தராகிய தேவனே, நீர் பரிசுத்தர், பரிசுத்தர்,பரிசுத்தர், வானமும் பூமியும் உமது மகிமையால் நிறைந்திருக்கின்றன; உன்னதமானவராகிய தேவரீருக்கே மகிமை உண்டாவதாக என்று, இடைவிடமால் உம்மை ஸ்தோத்திரிக்கிறோம், ஆமென்.**

**போதகர்** : சர்வ வல்லமையுள்ள தேவனே, எங்கள் பரமபிதாவே, தேவரீர் எங்கள்மேல் உருக்கமாய் இரங்கி, உம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்து சிலுவையில் மரணமடைந்து எங்களை மீட்டுக்கொள்ளும்படி, அவரைத்
தந்தருளினீரே; அவர் சிலுவையிலே ஒரே தரம் தம்மைத்தாமே ஏகபலியாக ஒப்புக்கொடுத்து, சர்வ லோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்வதற்கு நிறைவும், பூரணமும், போந்ததுமான பலியைச் செலுத்தினதுமல்லாமல், தமது அருமையான மரணத்தை என்றைக்கும் நினைப்பூட்டும் ஞாபகத்தை நியமித்து, தாம் திரும்ப வருமளவும் நாங்கள் அதை அனுசரித்து வரும்படி தமது பரிசுத்த சுவிசேஷத்தில் கட்டளையிட்டருளினாரே.

இரக்கமுள்ள பிதாவே, எங்கள் ஜெபத்தைக் கேட்டருளி உமது குமாரனும் எங்கள் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்து கட்டளையிட்ட பரிசுத்த நியமத்தின்படி, நாங்கள் அவருடைய பாடுகளையும், மரணத்தையும், உயிர்த்தெழுதலையும் நினைவுகூர்ந்து, உமது சிருஷ்டி பதார்த்தங்களாகிய இந்த அப்பத்தையும் திராட்ச ரசத்தையும் வாங்கும்போது, அவர் மூலமாய் தெய்வசுபாவத்துக்கு நாங்கள் பங்குள்ளவர்களாகும்படி கிருபை செய்தருளவேண்டுமென்று மிகவும் தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம்.

அவர் தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப்பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது

உங்களுக்காக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்

அப்படியே, இராப்போஜனம் பண்ணின பின்பு, அவர் பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி அவர்களுக்குக் கொடுத்து; நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி உங்களுக்காவும் அநேகருக்காகவும் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தம்; இதைப் பானம் பண்ணும்பொழுதெல்லாம், என்னை நினைவுக்கூரும்படி இதைச் செய்யுங்கள் என்று திருவுளம்பற்றினார். **ஆமென்.**

**எல்லாரும்** : **இரக்கமுள்ள கர்த்தாவே, எங்கள் சுயநீதியை நம்பி நாங்கள் இந்த உம்முடைய பந்தியில் சேரத் துணியாமல், தேவரீருடைய அளவற்ற இரக்கத்தையே நம்பிச் சேருகிறோம். உம்முடைய மேசையின்கீழ் விழும் துணிக்கைகளையாகிலும் பொறுக்கிக் கொள்ள நாங்கள் பாத்திரர் அல்ல. ஆகிலும் தேவரீர், எப்பொழுதும் இரக்கஞ்செய்யத் தவறாத ஆண்டவராயிருக்கிறீர். ஆன தன்மையினால் காருண்ணிய கர்த்தாவே, உமது அருமையான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் பரிபூரண ஜீவியத்தால் நாங்கள் நிரப்பப்படவும், அவருடைய சாயலில் நாங்கள் வளரவும், அவரிடத்தில் நாங்களும் எங்களிடத்தில் அவரும் எப்பொழுதும் வாசமாயிருப்பதற்கும், ஏற்ற விதமாய் இந்தப் பரிசுத்த நற்கருணையில் பங்குபெற எங்களுக்கு கிருபை செய்தருளும். ஆமென்.**

**லோகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற**
**தேவாட்டுக்குட்டியே, எங்களுக்கு இரங்கும்,**
**லோகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற**
**தேவாட்டுக்குட்டியே, எங்களுக்கு இரங்கும்,**
**லோகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற**
**தேவாட்டுக்குட்டியே, உமது சமாதானத்தைத் தாரும்.**

**அறிவிப்புகள்**
Announcements

மனப்பாட வசனங்கள்
Weekly Memory Verses
Genesis 9 : 12 – 13
**ஆதியாகமம் 9 : 12 - 13**

**மறைதிரு. விஜய் ஜோஸப்**
Rev. Vijay Joseph

**12. அன்றியும் தேவன்: எனக்கும் உங்களுக்கும், உங்களிடத்தில் இருக்கும் சகல ஜீவஜந்துக்களுக்கும், நித்திய தலைமுறைகளுக்கென்று நான் செய்கிற உடன்படிக்கையின் அடையாளமாக:**

**13. நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்; அது எனக்கும் பூமிக்கும் உண்டான உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும்.**

✝ **முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்** — **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Closing Prayer & Benediction — Rev. Vijay Joseph

✝ **ஆசீர்வாதப் பாடல்** — **சபையார் இணைந்து**
Benediction Song — Congregation

✝ **சபையார் நிற்கவும் / Indicates Congregation standing**